www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு 17

## கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

கி.பி. 1262 ஆம் ஆண்டில் வகமன்னன் போரில் இறக்கவே யாழ்ப்பாண அரசின் ன்னனாக காலிங்க ஆரியச்சக்கரவர்த்தியின் மகன் லசேகரசிங்கை ஆரியன் ரராசசேகரன் 1) முடிசூடிக்கொண்டான். குலசேகரசிங்கை ஆரியன் இராச்சியத்தின் நிர்வாக ஒழுங்கைச் சீர்ப்படுத்தி நாட்டில் சமாதானம் நிலவ வழி செய்தான். குலசேகரனையடுத்து அவனது மகனாகிய குலோத்துங்க சிங்கை ஆரியன் (செகராசசேகரன் - 2) கி.பி.1284 ல் அரசனானான். மன்னார்க்கடலில் முத்துக்குளிக்கும் உரிமை சிங்கை நகர் மன்னனுக்கே உரித்தாயிருந்தது. சிங்கள மன்னன் புவனேகபாகு என்பான் உரிமை பெற முயன்றதால் குலோத்துங்கன் புவனேகபாகுவுடன் போர் செய்து உரிமையை நிலைநாட்ட நேர்ந்தது.

குலோத்துங்க சிங்கையாரியானை அடுத்து கி.பி.1292 ஆம் ஆண்டு விக்கிரமசிங்கையாரியன் (பரராசசேகரன் - 2) அரசனானான்., இவன் காலத்தில் தமிழருக்கும் சிங்களவருக்கும் மத வேறுபாட்டால் உத்தர தேசத்தில் கலவரம் மூண்டது. அரசன் கலவரத்திற்கு காரணமான புஞ்சிபண்டாவையும் அவனைச் சார்ந்த பதினேழு பேரையும் பிடித்துச் சிரச்சேதஞ் செய்வித்தான். கலவரம் அதனால் அடங்கியது. எனினும் இவன் காலத்தில் உத்தரதேசத்தில் வன்னிச் சிற்றரசுகள் உருவாகத் தொடங்கின.

கி.பி. 1302 இல் யாழ்ப்பாண அரசின் மன்னாக வரோதய ங்கையாரியான் செகராசசேகரன் - 3) டிதரித்தான். அவன் தனது ராச்சியத்தில் வாழ்ந்த ங்களவருக்கும் தமிழருக்கும் டயே நல்லுறவை படுத்தினான். இவன் த்தில் வன்னியர்கள் ஏற்படுத்திய குழப்பம் டக்கப்பட்டது. கி.பி.1325 ல் ரோதயன் இறக்க, அவனது மந்தன் மார்த்தாண்ட து கையாரியன் (பரராசசேகரன் வ அரசு கட்டிலேறினான். இவன் த்திலும் வன்னியர் குழப்பம் ப து அடகக்பட்டனர். இந்த ன் காலத்தில் இயன்பட்டுடா ன்ற முஸ்லிம் பயணி யாழ்ப்பாணம் வந்தான். அங்கே ஆரியச்சக்கரவர்த்தியின் திரண்ட கடற்படையையும் செல்வத்தையும் கண்டு அதிசயித்தான்.

கி.பி. 1347 இல் குணபூசண சிங்கையாரியன் (செகராசசேகரன் 4) முடிசூடினான். இவன் காலத்தில் யாழ்ப்பாணவரசில் அமைதியும் சமாதானமும் நிலவியது. இவன் பின் இராச்சியத்தின் அரசனான வரோதய சிங்கையாரியான் (பரராசசேகரன் 4) காலத்தில் நாட்டில் அமைதி நிலவியபோதிலும் வன்னியர் கலகம் இருந்தது. 'வரோதயன், பாண்டிய மன்னன் சந்திரசேகரன் என்பானுக்கு படையுதவி இழந்து பாண்டி நாட்டையும் முடியையும் மீட்டுக் கொடுத்துள்ளான்.

### தென்னிலங்கை மீது படை

கி.பி. 1380 ஆம் ஆண்டில் விரோத சிங்கையாரியனின் மகன் சயவீரசிங்கையாரியன் காலத்தில் முத்துக்குளித்தல், சம்பந்தமாக எழுந்த பிரச்னையில் தென்னிலங்கை மன்னர்களில் ஒருவனான புவனேகபாகு என்பானைப் போரில் வென்று, திறை பெற்று மீண்டான். பன்னிரண்டு வருடங்கள் தென்னிலங்கை மன்னர்கள் யாழ்ப்பாண அரசனுக்குத் திறை செலுத்தினர் எனினும் கோட்டையின் அரசனாகவிருந்த அழகக்கோனார் என்பான் திறை செலுத்த ஒரு கட்டத்தில்

**-செங்கை ஆழியான்-**

மறுத்ததோடு சிங்கை நகர் அரசனால் இவனிடம் திறை வாங்கும்படியனுப்பப்பட்ட ஏவலாளர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றான். அதனால் சயவீர சிங்கையாரியனின் பெரும்படை தரைமார்க்கமாக கம்பளைக்கும் கடல் மார்க்கமாக கோட்டைக்கும் அனுப்பப்பட்டது.

கம்பளையரசனான புவனேகபாகு அப்படைக்கு எதிர் நிற்க வஞ்சி ஓடி ஒழிந்தான். கடற்படை தோல்வி கண்டு திரும்ப நேர்ந்தது.

கி.பி.1410 ஆம் ஆண்டளவில் ஜயவீர சிங்கையாரியன் இறக்க, குணவீரசிங்கையாரியன் (பரராசசேகரன் 5) முடிதரித்தான். இவன் காலத்தில் பராக்கிரமபபாகு என்ற சிங்கள அரசன் திறை செலுத்த மறுத்தான். அதனால் தென்னிலங்கைக்குப் படையெடுத்துச் சென்று சிங்களவரைத் தோல்வி காணவைத்து திறை பெற்று மீண்டான். இப்படையெடுப்புக்கு விஜய நகர மன்னன் படைகொடுத்து உதவினான்.


### கனகசூரிய சிங்கையாரியன்

குணவீரசிங்கையாரியனின் பின்னர் கி.பி.1440 ல் அவனது மகனான கனக சூரிய சிங்கையாரியன் (செகராசசேகரன் 60 அரசனானான். யாழ்ப்பாண இராச்சிய வரலாற்றில் இவனது காலம் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் கி.பி.1215 ஆம் ஆண்டிலிருந்து 1440 ஆம் ஆண்டுவரை சக்கரவர்த்திகள் கட்டிக்காத்த வடவிலங்கையின் விலை மதிப்பில்லாத சுதந்திரத்தை தென்னிலங்கை மன்னனிடம் பறிகொடுத்தமையால் ஆகும்.

### சிங்கைப் பரராசசேகரன் தொட்டு சங்கிலி செகராசசேகரன் வரை

### சப்புமல் குமரயா

கனகசூரிய சிங்கையாரியன், வடவிலங்கையை ஆண்டவேளை தென்னிலங்கையில் கோட்டை அரசனாக ஆறாம் பராக்கிரமபாகு என்பான் விளங்கினான். அவன் யாழ்ப்பாணத்து ஆரிய அரசர்கள் மீது மாறாத பகைமை கொண்டிருந்தான். தென்னிலங்கை மன்னர்களிடமிருந்து யாழ்ப்பாண மன்னன் திறைபெற்று வருகின்றமையை அவனால் பொறுக்கமுடியவில்லை. கம்பளை, றைகம, கோட்டை இராசதானிகளிலும் பார்க்க, யாழ்ப்பாணப் பட்டினத்தின் ஆரியச்சக்கரவர்த்தி சேனாபலத்திலும் பொருட்பலத்திலும் மேலோங்கியிருந்தான். அதனால் அவன் மலை நாட்டிலிருந்தும் கீழ்நாட்டிலிருந்தும் ஒன்பது துறைமுகங்களிலிருந்து திறை பெற்றான். கம்பளை மன்னனை ஆரியச்சக்கரவர்த்தியொருவன்




வெற்றி கொண்டதோடு நில்லாது கல்சாசனமொன்றில் தனது வெற்றியைப் பொறித்து மீண்டிருந்தான். கம்பளைக்கு அண்மையில் கோட்டகம என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்ச்சாசனம் அதனை நிரூபிக்கின்றது. இவற்றை பராக்கிரமபாகுவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கோட்டை மன்னனாக கி.பி. 1415 இல் ஆறாம் பராக்கிரமபாகு அரசனாகிய பொழுது பல நூற்றாண்டுகளாகப் பலவீனமுற்றிருந்த சிங்கள இராச்சியம் மீண்டும் வலுப்பெற்றது. பராக்கிரமபாகு விவேகமும் ஆற்றலுஞ் சாதுரியமும் கொண்ட அரசனாக விளங்கினான். இலங்கை முழுவதும் தன் மேலாதிக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டான். கண்டி இராச்சியம், வன்னிச் சிற்றரசுகள், யாழ்ப்பாண இராச்சியம் என்பனவற்றைக் கைப்பற்றியமை இவனுடைய சிறப்பு மிக்க சாதனைகளாகும்.

பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தின் மீது (யாப்பாபட்டுன) படையெடுப்பதற்கான ஆயத்தங்களை ஆரம்பத்திலிருந்தே செய்தான் பதினைந்தாம் நூற்றாண்டுச் சிங்கள நூல்கள் ஆரியச்சக்கரவர்த்தியின் அரசிருக்கையை 'யாப்பபடுன' என்று குறிப்பிடுகின்றன. 14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தில் ஏற்பட்ட விஜயநகரப் பேரரசின் எழுச்சியும் ஈழத்தின் வடபகுதியில் அதனது ஆதிக்கப்படர்ச்சியும் ஆரியச்சக்கரவர்த்தியின் மேலாணை ஈழத்தின் தென்பகுதிக்கு விஸ்தரிக்கப்படுவதைத் தடுத்தன.

இவையும் பராக்கிரமபாகுவின் 'யாபாபடுன' வெற்றிக்குக் காரணமாயின.

கி.பி.1450 ஆம் ஆண்டு தனது வளர்ப்புத்திரனும் சேனாதிபதியுமான சம்புமல் குமரயா (செண்பகப்பெருமான்) என்பானை, ஆறாம் பராக்கிரமபாகு பெரும் படையுடன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற அனுப்பினான்.

(தொடரும்)

படிப்பகம்